செ.வெ.எண்: 62/மார்ச்/2019 நாள்:24.03.2019

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள 9 சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 12518 நபர்களுக்கு வாக்குப்பதிவு அலுவலருக்கான முதல்கட்ட தேர்தல் பயிற்சியை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.சிவராசு, இ.ஆ.ப., அவர்கள் இன்று 24.03.2019 தொடங்கி வைத்தார்.**

---- --- ----

மணப்பாறை லட்சுமி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான தேர்தல் பயிற்சி வகுப்பை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தொடங்கிவைத்து தெரிவித்ததாவது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மணப்பாறை லட்சுமி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 2218 அலுவலர்களுக்கும், ஸ்ரீரங்கம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 1250 அலுவலர்களுக்கும், திருச்சிராப்பள்ளி புதுார் பிஷப் ஹீபர் மேல்நிலைப்பள்ளியில் 993 அலுவலர்களுக்கும், திருச்சிராப்பள்ளி மதுரை ரோடு ஹோலி கிராஸ் கல்லூரியில் 1434 அலுவலர்களுக்கும், திருவெறும்பூர் எல்லக்குடி மாண்போர்டு மேல்நிலைப்பள்ளியில் 1090 அலுவலர்களுக்கும் இலால்குடி நெஸ்ட் மெட்ரிக்குலேஷன் பள்ளியில் 1279 அலுவலர்களுக்கும் மண்ணச்சநல்லூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 949 அலுவலர்களுக்கும் தொட்டியம் ஏலூர்பட்டி கொங்கு நாடு பொறியியல் கல்லூரியிலும் 1999 அலுவலர்களுக்கும் துறையூர் சௌடாம்பிகா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 1106 அலுவலர்களுக்கும் ஆக மொத்தம் 12318 அலுவலர்களுக்கு பாராளுமன்ற தேர்தல் தொடர்பான முதல்கட்ட பயிற்சி வகுப்பு இன்று காலை முதல் மாலை வரை பயிற்சி அளிக்கப்படுகிறது.

தேர்தல் தொடர்பான பயிற்சி வகுப்பில் வாக்குப்பதிவு தலைமை அலுவலர், வாக்குப்பதிவு நிலை அலுவலர் -1, வாக்குப்பதிவு நிலை அலுவலர் -2, வாக்குப்பதிவு நிலை அலுவலர் -3 மற்றும் 1200 வாக்காளர்களுக்கு அதிகமாக உள்ள வாக்குசாவடி மையங்களுக்கு வாக்குப்பதிவு நிலை அலுவலர்-4 ஆகியோருக்கு வாக்குப்பதிவு மையத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி (VVPAT-Voters Verifiable Paper -Audit Trail) இயந்திரத்தினை எவ்வாறு பயன்படுத்தவது, வாக்காளர் பட்டியிலில் வாக்காளர்களை கண்டறிந்து உரிய ஆவணங்களை எவ்வாறு சரிப்பார்ப்பது, மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்கள் தயார் செய்து ஒப்படைக்க வேண்டிய படிவங்கள் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது என திருச்சிராப்பள்ளி மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.